இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 53 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 15 – செவ்வாய்க்கிழமை 01 அக்டோபர் 2024 – திருச்சி ★★ 28 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 53 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 15 - Tuesday 01 October 2024 - Trichy ★★ 28 Pages ₹ 5.00





ஆளுநர் மாளிகையில் நேற்று முன்தினம் (29.9.2024) – ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களுடன், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அமைச்சரவை எடுத்துக் கொண்ட குழு புகைப்படம்!

## துணை முதலமைச்சருக்கும் – புதிய அமைச்சர்களுக்கும் வாழ்த்துகள்! மிகுந்த நம்பிக்கையோடு நமக்கு வாக்களித்துள்ள

# மக்களின் நம்பிக்கையைக் காக்கும் வகையில் நாம் அனைவரும் செயல்பட வேண்டும்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, அக். 1 -**

**தமிழ்நாட்டின் துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றுள்ளதை யொட்டியும், புதிதாக நான்கு அமைச்சர்கள் பதவியேற்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டதை அடுத்தும், நேற்று முன்தினம் (29.9.2024) மாலை, முதல்வர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த அறிக்கையில், "துணை முதலமைச்சருக்கும் - புதிய அமைச்சர்களுக்கும் வாழ்த்துகள்!" என்றும் - "மிகுந்த நம்பிக்கையோடு நமக்கு வாக்களித்துள்ள மக்களின் நம்பிக்கையைக் காக்கும் வகையில் நாம் அனைவரும் செயல்பட வேண்டும்" என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் - கழகத் தலைவர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

பவள விழாவைக் கொண்டாடும் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ்நாட்டை ஆறாவது முறையாக ஆட்சி செய்து வருகிறது. கழகத்தின் கரங்களில் தமிழ்நாட்டு மக்கள் ஆட்சி அதிகாரத்தை வழங்கிய போதெல்லாம் நிறைவேற்றிக் காட்டிய தொலைநோக்குத் திட்டங்களின் மூலமாக நாம் அடைந்த வளர்ச்சிதான், இன்று நாம் காணும் நவீன தமிழ்நாடு!

**அனைத்து வளர்ச்சிக் குறியீடுகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது!**

இன்றைய தினம் இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளோம். அந்த வளர்ச்சியின் மூலமாக மக்கள் பயனடைந்து வருவதையும் நேரடியாகப் பார்த்து வருகிறோம். மாநில வளர்ச்சியின் குறியீடுகளாக உள்ள அனைத்திலும் தமிழ்நாடு இன்று சிறந்து விளங்குகிறது. இதை இன்னும் சிறப்பானதாக ஆக்கவே திராவிட மாடல் ஆட்சியானது நாள்தோறும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி வருகிறது.



அனைத்துத் துறை வளர்ச்சி அனைத்து மாவட்ட வளர்ச்சி அனைத்துச் சமூக வளர்ச்சி ஆகியவற்றின் மூலமாக 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற இலக்குடன் நமது அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. சமூகநீதிச் சிந்தனையோடு, தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஜனநாயகப்படுத்தி விளிம்புநிலை மக்கள், ஏழை எளியவர்களின் வாழ்க்கையில் ஏற்றத்தை உருவாக்கி இருக்கிறோம்!

**மூன்றாண்டு கால வளர்ச்சிக்கு அமைச்சர் பெருமக்களின் பங்களிப்பு!**

இவை ஏதோ தனிப்பட்ட எனது சாதனை அல்ல என்பதைச் சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் சொல்லி இருக்கிறேன். அரசும், பொறுப்பும், தலைமையும், முதலமைச்சரின் செயல்களும் கூட்டுப் பொறுப்பு என்பதை உணர்ந்தவன் நான். அதன்படியே செயல்படுபவன் நான். திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை உணர்வு நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கிறது.

இம்மூன்றாண்டு கால வளர்ச்சிக்குத் தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள் அனைவரும் பங்களித்து இருக்கிறார்கள்.

இதன் இன்னொரு கட்டமாகவே தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சராக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி நியமிக்கப்பட்டுள்ளார். முதலமைச்சரான எனக்குத் துணையாக அல்ல; இந்த நாட்டு மக்களுக்குத் துணையாக அவர் இருக்கப் போகிறார். தனக்கு வழங்கப்பட்ட விளையாட்டுத் துறையின் மூலமாக இந்தியாவின் கவனத்தை மட்டுமல்ல, உலகின் கவனத்தை ஈர்த்தவர் உதயநிதி. விளையாட்டுத் துறை, மிகக் குறுகிய காலத்தில் வீறுகொண்டு எழுந்துள்ளது. நாள்தோறும் விளையாட்டு வீரர்கள் பெற்றுவரும் பரிசுகள், ஒலிம்பிக்கை நோக்கிய நம் மாநிலத்தின் பயணமாக அமைந்துள்ளது.

அதேபோல், தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டங்களை மிக உன்னிப்பாக ஆய்வு செய்து வருகிறார். அதன் செயல்பாடுகளை ஒவ்வொரு நாளும் கண்காணித்து அதன் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றிக் காட்டி வருகிறார் அமைச்சர் உதயநிதி.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை!

# துணை முதல்வரானார் உதயநிதி ஸ்டாலின்!

## வி.செந்தில் பாலாஜி - ஆர்.ராஜேந்திரன் - கோவி. செழியன் - சா.மு.நாசர் - 4 புதிய அமைச்சர்களுக்கு ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார் ! முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, அக். 1-**

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராக 28ந் தேதியன்று அறிவிக்கப்பட்டார். அவருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். துணை முதலமைச்சராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**

புதிய அமைச்சர்களாக வி.செந்தில் பாலாஜி, ஆர்.ராஜேந்திரன், சா.மு.நாசர், கோவி. செழியன் ஆகியோருக்கு ஆளுநர் ஆர்.என். ரவி பதவியேற்பு உறுதி மொழி செய்து வைத்தார். புதிய அமைச்சர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்தார்.

இது தொடர்பான அரசு செய்தி வெளியீடு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பரிந்துரையின்படி, தமிழ்நாடு அமைச்சரவை 28.9.2024 அன்று மாற்றம் செய்யப்பட்டு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதலமைச்சராகவும், புதிதாக நான்கு அமைச்சர்களை நியமித்தும், ஆறு அமைச்சர்களுக்கு இலாகாக்கள் மாற்றம் செய்தும் ஆளுநர் ஆர். என்.ரவி அவர்கள் ஒப்புதல் வழங்கினார்.

ஆளுநர் மாளிகையில், நேற்று முன்தினம் (29.9. 2024) மாலை 3.30 மணியளவில் நடைபெற்ற பதவியேற்பு விழாவின்போது, தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களிடம், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், புதிய அமைச்சர்களையும் அறிமுகம் செய்து வைத்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், வி.செந்தில் பாலாஜிக்கு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சராகவும்,

சா.மு.நாசருக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சராகவும்,

முனைவர். கோவி.செழியனுக்கு உயர் கல்வித் துறை அமைச்சராகவும்,

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்



துணை முதல்வராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோபாலபுரம் இல்லத்திற்கு நேரில் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.